Brief Translation in Tamil of

Speech given by
R. Bindu, Minister of Higher Education, Kerala at National Education Assembly New Delhi
on 30 Apr 2023.

Translation by Moses Prabhu,TNSF

NEP(NATIONAL EDUCATION POLICY)

கல்வியை வணிகப் பொருளாக்குகிறது:

அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு ஞாயிறு(30-4-23) அன்று டெல்லியில் ஏற்பாடு செய்த 'தேசிய கல்விக்கொள்கை குறித்த கருத்தரங்கை துவக்கி வைத்த பேசிய கேரள உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர்.ஆர்.பிந்து

2020 ஆம் ஆண்டில் மத்திய அரசு வெளியிட்ட தேசிய கல்விக் கொள்கை கல்வியை வகுப்புவாதமாக்குவதற்கும் பண்டமாக்குவதற்கும் ஒரு வாகனமாகச் செயல்படும் என்று தெரிவித்தார். வகுப்புவாத சக்திகள் பெருநிறுவன சக்திகளுடன் கைகோர்த்து வரும். தற்போதைய சமூக-அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் இருந்துதான் தேசிய கல்விக்கொள்கை பார்க்கப்பட வேண்டும் என்றார். நாட்டின் கூட்டாட்சி கொள்கைகளை நிராகரித்து, தேசிய கல்விக் கொள்கை மத்தியமயமாக்கலை திணிக்கிறது எனவே NEP நாடாளுமன்ற ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று அவர் கோரினார். NEP அமுலாக்கத்தில் எந்தவொரு ஜனநாயகத்தன்மையும் இல்லை சமூக ஆய்வுக்கும் உட்படுத்தப்படவில்லை பாராளுமன்ற நடைமுறையை முற்றிலும் புறக்கணித்துள்ளது.

சமூக தணிக்கை வழியாக பொதுமக்கள் கருத்து கேட்பு என்ற கேலிக்கூத்து UGC வழியாக நடைபெற்றது அங்கே பல கேள்விகளுக்கான பதில்கள் புறக்கணிக்கப்பட்டது.

ஒரு கல்விக் கொள்கையானது முந்தைய கொள்கை ஆவணங்களின் தாக்கங்கள், தகுதிகள் மற்றும் தீமைகள் பற்றி ஆராய வேண்டும். ஆனால் முந்தைய கொள்கை ஆவணங்களின் தாக்கத்தை ஆய்வு செய்ய தேசிய கல்விக்கொள்கைக் முயற்சி செய்யவில்லை பெரும்பாலான இடங்களில் வெறுமனே பழங்கால பெருமைகளை மட்டுமே பேசுகிறது.

மாநிலம் மற்றும் அதன் மக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ற வகையில் கேரளாவின் உயர் கல்வி மாதிரியுடன் தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதே கேரள அரசின் நோக்கம்.

கேரள அரசு மக்களை மையப்படுத்திய அறிவு சமுதாயத்தை உருவாக்க எண்ணுகிறது. அறிவுச் சமூகத்தின் இந்த கேரள முன்மாதிரி என்பது வளர்ந்த முதலாளித்துவ சமூகத்தால் முன்வைக்கப்படும் மாதிரியிலிருந்து வேறுபட்டது.

அறிவு உற்பத்தியை மற்றும் ஆராய்ச்சி மனப்பான்மையை ஒரு பெரிய சமுதாயத்திற்கு எடுத்துச் செல்ல கேரள அரசு விரும்புகிறது என்று அவர் கூறினார்.

தேசிய கல்விக்கொள்கை வலியுறுத்தும் கல்லூரிகளின் இணைப்பு முறையை அகற்ற வேண்டும் என்றும், இதுபோன்ற நடவடிக்கை கிராமப்புற மாணவர்களுக்கு குறிப்பாக பழங்குடியின மாணவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் கூறினார்.

தேசிய கல்விக்கொள்கை நுழையும் சூழலில் மாநில அளவில் வலுவான கல்வி கட்டமைப்பு இருப்பது முக்கியம்.

தேசிய கல்விக்கொள்கை பலவற்றை விவாதித்த போதும் இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கான முன்னேற்றத்தில் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார சவால்களை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வதில் அது தவறிவிட்டது.

"இந்தியம்" என்ற வார்த்தை ஆவணத்தில் பல முறை திரும்பத் திரும்ப வருகிறது, ஆனால் "இந்தியம்" என்பதன் வரையறை மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டதாக உள்ளது . இந்தியத் தன்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது தற்போதைய சூழ்நிலையில் மிகக் குறுகிய மனப்பான்மை கொண்ட கருத்துக்கு வழி வகுக்கிறது. நமது தேசத்தின் பன்முகத்தன்மை கொண்ட பண்பாடு மற்றும் பன்முகத்தன்மை கொண்ட வாழ்வியல் முறை ஆகியவை தான் இந்தியாவின் மதிப்புமிக்க செல்வம், ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த பன்முகத்தன்மை மற்றும் கலாச்சாரத்தின் பல குரல்களை தேசத்தின் பலமாக பார்ப்பதற்கு பதிலாக தேசிய கல்விக்கொள்கை அதை முற்றிலும் நிராகரிக்கிறது அதை சிதைக்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.